**World Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# பாவம்

"பாவம் என்று நீங்கள் எதை கருதுகிறீர்களோ அதுவே பாவம் என இன்றைய நாட்களில் மனிதர்கள் சொல்கிறார்கள். அது அப்படியல்ல. பாவம் என்பது அதைக் குறித்து கர்த்தர் என்ன நினைக்கிறார் என்பதாகும். நீங்கள் உங்கள் மனச்சாட்சிக்கு ஒத்தவிதத்தில் சிந்தித்திருக்கலாம். தேவன் அவருடைய பார்வையில் சிந்திக்கிறார்."

பாவம் என்றால் என்ன?

பாவம் என்பதன் விவரணம்
இந்தச் சொல் ஆங்கில விவரண அகராதியிலிருந்து வருவதுடன் "இலக்கை தவறுதல் " என்று அர்த்தப்படுகிறது.

தேவ வார்த்தையின்படி பாவம் என்பது தேவ மகிமையை இழந்த வர்களாகி என்று விவரிக்கப்படுகிறது. (ரோமர் 3:23), படி எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி எனப்படுகிறது. அதாவது தேவன் நம்மை தேவமகிமையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று நியமிக்கிற இலக்கை தவறுதல் ஆகும். நான் பரிசுத்தராய் இருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று தேவன் நமக்கு கட்டளை கொடுக்கிறார். இதுவே பாவத்தை அளக்கும் அளவுகோல். எமக்குள் இருக்கும் தேவமகிமை தேவனைப்போல் மாறுவதன் விகிதாசார அளவாக எமது குணாதிசயத்தில் நேரடியாக பிரதிபலிக்கிறது – ஆயினும் தேவமகிமையை இழக்கும் அளவும், பாவத்தின் அளவும் அதிகரிக்க அதிகரிக்க, தேவனுடைய சாயல் எமக்குள் குறைந்து வெளிப்படுகிறது. எப்படி ஒருவர் தேவமகிமையை இழக்கக்கூடும்? கீழே தரப்படுகிற பகுதிகளில் பாவத்தை குறித்து குறிப்பாய் சொல்லப்படும் விவரணங்களை பார்ப்போம்.



## பாவத்தின் இயல்பு

எல்லாவற்றிற்கும் முதலில் பாவம் என்பது நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப் படியாமை ஆகும்.

> *பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். 1 யோவான் 3:4*

இரண்டாவதாக, பாவம் என்பது அநீதி: நியாயமற்றதும் பிழையானதும்.

> *அநீதியெல்லாம் பாவந்தான். 1 யோவான் 5:17*

மூன்றாவதாக, பாவம் என்பது அசட்டை செய்தல். ஒருவன் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதை செய்யாதிருந்தால் அது பாவமாகும்.

> *ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமா யிருக்கும். யாக்கோபு 4:17*

நான்காவதாக, விசுவாசமில்லாமல் செய்யப்படும் காரியங்கள் பாவமாகும்.

> *உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்குமுன்பாக உன்மட்டும் இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கிய வான். ஒருவன் சமுசயப்படுகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே. ரோமர் 14:22,23*

ஐந்தாவதாக, தீய நோக்கங்களும் பாவமாகும்.

> *தீயநோக்கம் பாவமாம். பரியாசக்காரன் மனுஷருக்கு அருவருப்பானவன். நீதிமொழிகள் 24:9*

இறுதியாக, தேவனுடைய புத்திரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியாமை பாவங்களில் பெரிய பாவமாகும். (யோவான் 16:9) விசுவாசமில்லாமை பொதுவாக தேவனுடைய வெளிப்பாடு

வார்த்தையில் சொல்வதானால் பாவமாகும். ஆனால் இவைகளில் மிகப்பெரிய பாவம் தேவனுடைய குமாரனை விசுவாசிக்காமை ஆகும். பாவம் என்றால் என்ன என்பதை கீழே கொடுக்கப்பட்டவை சுருக்கமாக வேத வார்த்தையோடு பொருந்தும் வகையில் காண்பிக்கிறது.

| | |
|---|---|
| 1. வரையறையை மீறுதல் | தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமை |
| 2. நீதியற்றதன்மை | அநீதி, நீதிவிரோதமான, பிழையான |
| 3.செய்யவேண்டும் என அறிந் திருக்கிற கடமைகளை அசட்டை செய்தல் | நன்மை செய்ய தவறுதல |
| 4. விசுவாசமில்லாமை | திடநம்பிக்கையோடு கிரியை செய்யத் தவறுதல் |
| 5. மூடத்தனமான கிரியைகள் | தந்திரமான, அஜாக்கிரதையான திட்டங்கள் |
| 6. நம்பிக்கையில்லாமை | இயேசுகிறிஸ்துவின் மீது நம்பிக்கை இல்லாமை |

நான் இந்த பாடத்தில் குறிப்பிட விரும்புவது பாவத்தை ஒரு செயல்வடிவிலேயே கலந்துரையாடுகிறோம். எந்த *ஒரு மனிதரையும்* அல்ல – அதாவது சாத்தானை மையப்படுத்தி அல்ல, சாத்தானின் கிரியைகளை தங்களுக்குள் கொண்டிருக்கும் அவிசுவாசிகளுக்கு சாத்தானுடைய குணவியல்பை அல்லது பாவ சுபாவத்தை அவன் கொடுப்பதை குறித்தே ஆகும். இது பரிசுத்த ஆவியானவர் தங்கும் விசுவாசிகளில் அவர் பரிசுத்தமான குணவியல்பை கொடுத்து மாற்றுவது போலாகும்.

விவரமாகச் சொல்வதானால், நாம் பாவத்தை, கீழே குறிப்பிடப்பட்ட காரியங்களுக்கூடாகப் தேவனுடைய பார்வையில் பார்க்கப் போகிறோம்.

- தேவன் வெறுக்கும் காரியமே பாவம் - அவர் அதை அருவருக்கிறார். (உபாகமம் 12:31)
- பாவம் தேவனுடைய குணவியல்புக்கு எதிரானது (ஏசாயா 6:3, 1 யோவான் 1:5)
- பாவம் ‘‘அசுத்தம்’’ என்று அழைக்கப்படுகிறது. (நீதிமொழிகள் 30:12, எசேக்கியேல் 24:13, யாக்கோபு 1:21)
- இறுதி தண்டனை – மரணம் - பாவத்தின் பலன் (எசேக்கியேல் 18:4,20, ரோமர் 6:3)

இது முக்கியமானது, எப்படியாயினும், மேலே சொல்லப்பட்ட பாவத்தை குறித்த ஒவ்வொரு தலைப்பும் தேவன் அவருடைய கோணத்தில் எப்படி பார்க்கிறார் என்று காண்பிக்கிறது. தேவன் எல்லா நினைவு களையும், நோக்கங்களையும், செயலுக்கு பின்னால் உள்ள நினைவுகளையும் நீதி விசாரிக்கிறவராய் இருக்கிறார். முடிவாக, கிறிஸ்துவை பற்றிய மூல உபதேச வசனங்களை விட்டு, வேதாகமம் நன்மை செய்வதற்கு நமக்கு அழைப்புக் கொடுக்கும் காரியங்களை செய்ய நம்மால் முடியும். (எபிரேயர் 6:1) சிலருக்கு உதவுதல், பிறருக்காக ஜெபித்தல், சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளல், நமஸ்கார பாடல்களை பாடுதல், பிரசங்கித்தல் கூட தேவனுடைய பார்வையில் பாவமாகக்கூடும். இது வெளியரங்கமான கிரியை அல்ல, உள்ளான பாவமாகும்.

## வகைகள்

Strong's Dictionary (ஸ்டோர்ங் டிக்ஷனரி)படி: H2403 (பாவம்): குற்றம் (உதா: ஒரு நிகழ்வு) தேவமகிமையை இழக்கும் எந்தக் காரியமும் பாவமே.

எபிரேய மொழியில் பாவம் என்பது: 1) நீங்கள் இருக்கவேண்டிய இடத்தை விட்டு சறுக்குதல் 2) தேவன் உங்களுக்கு வைத்திருக்கும் பாதையிலிருந்து தவறுதல் 3) தேவன் வைத்திருக்கும் தகுதியை அடையாதிருத்தல் 4) அடையாளத்தை அல்லது வழியை தவறவிடல்

கிரேக்க மொழியில் பாவம் என்பது: 1) அடையாளத்தை தவறவிடல் 2) பரிசுத்தமான தேவனுக்கு கீழ்ப்படியாத செயல்

### வரையறையை மீறுதல்

Strong's Dictionary (ஸ்டோர்ங் டிக்ஷனரி)படி: H6588 (வரையறையை மீறுதல்): அருவருப்பு (தேசிய, ஒழுக்கமான அல்லது மதரீதியான) கலகம்

எபிரேய மொழியில் வரையறையை மீறுதல் என்பது: 1) வெற்றிகரமான மாறுபாடு, அதனால் தேவனுடைய வழியில் வாழ்தலுக்கு எதிரான கலகம்.

கிரேக்க மொழியில் வரையறையை மீறுதல் என்பது: முன்னால் செல்தல், வரையறையிலிருந்து மேலே பயணித்தல்.

பாவச்செயல்

Strong’s Dictionary (ஸ்டோர்ங் டிக்ஷனரி)படி: H5771 (பாவச்செயல்,அநீதி): தவறானதை பிடிவாதமாய்க் கடைபிடித்தல், அதாவது, (நியாயமான) தீய: தேவனைக் குறித்த ஞானத்திற்கு விரோதமாய் திரும்ப திரும்ப செயற்படும்போது பாவமாகிறது. அது தொடர்ந்து நடைபெறும்போது அநீதியானது மாம்சத்திற்குரியதாய் மாறுகிறது.

எபிரேய மொழியல் அநீதி என்பது: தவறானதை பிடிவாதமாய் கடைபிடிக்கும், வளைவான, நிஜத்தை மாற்றல், மார்க்கம் தவறல் எனப் பொருள்படும்.

எல்லைமீறல்

Strong’s Dictionary (ஸ்டோர்ங் டிக்ஷனரி)படி: H6586 (எல்லைமீறல்): தேவன் எம்மிடத்தில் சரியாக என்ன எதிர்ப்பார்க்கிறார் என அறிந்திருந்தும், வேண்டுமென்றே எல்லையை தாண்டி செல்லல். அடிக்கடி நாம் தேவனுடைய விருப்பத்தை மறுதலித்தபோதும் தேவன் நம்மிடத்தில் என்ன எதிர் பார்க்கிறார் என எமக்குத் தெரியும். அவருடைய வார்த்தைகளை மறுதலிப்பதை தெரிவு செய்கிறோம்.

## பாவத்தின் கிரியை (செய்கையின் ஒழுங்கு)

எமது வாழ்வில் பாவத்தின் கிரியை என்ன? பலவிதமான சோதனை களின் பிரதிபலனாக பாவம் அமைகிறது. சோதனைகள் மனதைக் கவரும் விதத்தில் தேவனைவிட்டு பிரிக்கும் வகையில் எமது வாழ்வில் பல பகுதிகளில் அமைகிறது. நாம் சோதனைகளில் அகப்படும்போது, அதன் பலனாக பாவம் அமைகிறது. ஆனால் எப்படி சோதனை முதலிடம் வகிக்கிறது?



வேதாகமம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம் - யாக்கோபு 1:14-15

> *''அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந் தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது, மரணத்தை பிறப்பிக்கும்.''*

இங்கே, எப்படி பாவம் எமது வாழ்வை கொள்ளையிடுகிறது என நாம் காண முடியும். அது பேராசையிலேயே ஆரம்பிக்கிறது. – மாம்சத்தில், கண்களில், வாழ்க்கையின் பெருமையில், (1 யோவான் 2:16) சோதனையில் ஒன்றுமில்லை. ஆனால் அது பலவித ஆசைகளுக்கான அழைப்பிதழை தெளிவாய் எமது வாழ்வில் காட்டுகிறது. நாம் இந்த ஆசைகளுக்கு ஆம் என்று சொல்வோமானால், அதன் யோசனை களுக்கு நாம் உடன்படுகிறோம். எமது விருப்பத்திற்கும் (ஆத்துமா) பேராசை எண்ணத்தின் மாற்றமுடியாத பலன்களுக்கும் இடையில் ஒரு மங்கலான தன்மை காணப்படுகிறது. இந்த பாவ கருத்தருப்பில் காலத்திற்கு முன்னான கருக்கலைப்பு இல்லை. ஆனால் பாவ உற்பத்தி நிச்சயமானது. பாவத்திற்கு மனந்திரும்பாமையானது ஆவிக்குரிய மரணத்தையும் நித்தியமான மரணத்தையும் பலனாக கொண்டுவரும். ஆயினும், நித்திய நியாயத்தீர்ப்பை தவிர்ப்பதற்கு, நாம் பேராசை எண்ணங்களுக்கு உணர்வில், சிந்தனையில் இல்லை என்று சொல்ல வேண்டும். (ஆத்துமாவின் தெரிந்தெடுககும் பகுதி)

நாம் சிறிய உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். புதிய கையடக்கத் தொலைபேசியை வாங்கும்போது அது எப்படி பாவத்தின் பலனாக இருக்கும் என்று பாருங்கள். இன்றைய நாட்களில், கையடக்கத் தொலைபேசியானது அத்தியாவசிய பொருளாகவும், முக்கிய தேவைகளை நிறைவேற்றுகிற தொடர்பாடலாகவும் அமைந்திருக்கிறது. எப்படியாயினும், புதிய (மொடல்) வித தொலைபேசி சந்தையில் வரும்போது நீங்கள் அதை வாங்க வேண்டும் என உணருவீர்கள். அதை வாங்குவதற்கான உண்மையான நோக்கத்தை வரிசைப் படுத்துங்கள். அது உங்கள் வேலையின் திறனை உயர்த்துமானால், சில முக்கிய தேவைகளை நிறைவேற்றுகிறதாய் அமைகிறதானால் அல்லது நீங்கள் தற்போது பாவிப்பதில் இல்லாத முக்கிய அடிப்படை காரியங்களை நிறைவேற்றுகிறதாய் அமைகிறதா? அப்படியானால் உங்கள் தேவையை நிறைவேற்றுகிறதை நீங்கள் வாங்கலாம். ஆனால் பல சந்தர்ப்பங்களில் என்ன நடக்கிறதென்றால் நீங்கள் விருப்பத்தில் சோதிக்கப்படுகிறீர்கள் நவீன வடிவிலான கையடக்கத் தொலைபேசியை மற்றவர்களை விட நீங்கள் முதலில் சொந்த மாக்கிக்கொள்ளவும், ஏற்கனவே அதை போன்று வைத்திருப்ப

வர்களைப் போன்று வைத்திருப்பதற்கும் (ஜீவனத்தின் பெருமை) அல்லது மாம்சமான விளம்பரங்களினால் அதை சொந்தமாக்கிக் கொள்ள விரும்பி, சந்தைப்படுத்தல் கவர்ச்சிகளினால் ஈர்க்கப்பட்டு (கண்களின் ஆசை) அல்லது அதன் வடிவமைப்பில் அழகிலும், அதன் வேகமான செயற்பாட்டிலும், கவர்ச்சியான அதன் வினைத்திறனான பக்கவடிவமைப்பு இணையத்தள வசதியிலும் (மாம்சத்தின் இச்சை) நீங்கள் சோதிக்கப்பட்டிருக்கலாம். நீங்கள் அந்த கையடக்கத் தொலை பேசியை வாங்குவதற்கான உங்கள் உண்மையான நோக்கத்தை பிரித்தரிந்து கொள்ளுங்கள். அது அவசியமானதா அல்லது தேவை யானதா, அப்படியானால் நீங்கள் ஏற்கனவே பேராசை என்னும் பாவத்தில் விழுந்துவிட்டீர்கள்.

## பாவத்தின் பலன்




நான் சிந்திக்கும் போது பாவத்தின் பலன்கள் பலவிதமாக உண்டு என அறிகிறேன். ஆனால் முதலாவதும் முக்கியமானதுமான ஒன்று தேவனுக்கும் உங்களுக்கும் உள்ள உறவு முறிவடைதலாகும்.

இதன் விளைவாக தொடர்பு இழக்கப்படுகிறது. நீங்கள் பழைய ஏற்பாட்டில் கடைசி புத்தகமான மல்கியா புத்தகத்தை வாசித்தால், தேவன் அவருடைய ஜனங்களை திரும்ப திரும்ப எச்சரித்தபோதிலும் அவர்கள் மனந்திரும்பு வதற்கு மறுதலித்து தேவனிடம் இருந்து தூரப்போனார்கள். அதன்பின்பதாக, தேவன் பேசாதிருந்ததால் 430 வருடங்கள், இருண்ட (அமைதி) காலத் திற்குள் ஜனங்கள் காணப்பட்டார்கள். நான் அந்த இருண்ட வருடங்களை சிந்திக்கும் போதெல்லாம் தேவனுடைய தொடர்பாடல் இல்லாமல் அவர்கள் எப்படி வாழ்ந்திருக்கக்கூடும் என நான் வியப்படைவதுண்டு. அவர்கள் நிச்சயமாக தேவனை நோக்கி கூப்பிட்டார்கள் என மல்கியா புத்தகத்தில் அவர்களைக் குறித்து தேவன் சொல்கிறார்.

தேவனோடு நீங்கள் உறவு கொள்வதானது உங்கள் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான பகுதி என நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். அது உங்கள் உணவைவிட தானாகவே நடைபெறும் உங்கள் சுவாசத்தை விட முக்கியமானது. மனிதன் உயிர்வாழ்வது அப்பத்தினால் மாத்திரமல்ல (மத்தேயு 4:4) என இயேசு கூறுகிறார். நாம் எமது உணவை தவிர்த்தாலும்

தேவனோடு அவருடைய பிரசன்னத்தில் நாம் வாழ்வதை அவர் விரும்புகிறார்.

நாம் இயேசு கிறிஸ்துவை நமது முன்மாதிரியாக கொண்டால், அவர் தேவனோடு தனக்குள்ள உறவை எவ்வளவு முக்கியத்துவமாய் கொண்டார் என்பதை பார்ப்போம். இயேசு கெத்சமனே தோட்டத்தில தன் ஆவியிலே தன் மரணத்தை குறித்து பெருந்துயர் கொண்டு இரத்தத்தின் பெருந்துளிகளாய் வியர்வையை சிந்தினார். இந்தக்காட்சியானது அவரைப் பற்றி தெளிவாக காண்பிக்கிறது. அவருடைய இருதயத்திலிருந்து கசிந்த வேதனையின் அந்த கொடிய துன்புறுத்தலின் வலியானது அவருடைய சரீர வலியை அடையாளப் படுத்தாமல் எமது எல்லா பாவங்களுக்கான முழுமையான தண்டனையினி மித்தம் அவர் தேவனோடுள்ள உறவை இழக்கப்போகும் ஆவிக்குரிய வலியை காண்பிக்கிறது. அதுவரையில் இயேசு சந்தோஷமாய் தேவனுடைய சித்தத்தை செய்துவந்தார். யோவான் 17:4 ன்படி அவர் தேவன் நியமித்த கிரியையை செய்து முடித்ததாக தன் ஜெபத்திலே கூறியிருக்கிறார். ஆனால் அவருடைய இருதயத்தை ஊடுருவி வேதனைப்படுத்தியது பிதாவுடைய பிரசன்னத்தை இழக்கநேரிடும் கிட்டத்தட்ட 3மணிநேரம் தான், அது சாதாரண மரணத்தைவிட அவரை அதிகமாய் துக்கப்படுத்தியது.

தீர்க்கதரிசி ஏசாயா இந்த பிரிவைக்குறித்து இப்படியாக தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார்.

> *இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை. கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. ஏனென்றால், உங்கள் கைகள் இரத்தத்தாலும், உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும், கறைப்பட்டிருக்கிறது. உங்கள் உதடுகள் பொய்யைப் பேசி, உங்கள் நாவு நியாயக்கேட்டை வசனிக்கிறது.*
>
> *ஏசாயா 59:1-3*

நிச்சயமாக, தேவன் உங்கள் ஜெபத்தை கேட்கமாட்டார்.

> *நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன். நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன். உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. (ஏசாயா 1:15)*

*என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனா னால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார். (சங்கீதம் 66:18)*

ஆனால் தேவன் நீதிமானுடைய ஜெபத்தைக் கேட்கிறார்:

*துன்மார்க்கருக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார்: நீதிமான் களின் ஜெபத்தையோ கேட்கிறார். (நீதிமொழிகள் 15:29)*

*பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார். யோவான் 9:31*

ஆகவே எனது ஜெபமோ நீங்கள் தேவனோடு கொண்டுள்ள உறவின் ஐக்கியமானது உங்கள் வாழ்க்கையில் முதன்மையானதாக வேண்டும். பாவத்தின் கட்டாயத்திலிருந்து, ஆபத்து நிறைந்த பாதையிலிருந்து நீங்களே பத்திரமாக வந்து சேருங்கள்.

## பாவத்தை குறித்த அறிவுணர்ச்சி

நாம் முன்பு பார்த்தது போல இலக்கை தவறும் எதுவும் பாவமே. அது சிந்தனையாய், சொல்லாய், செயலாய் இருக்கலாம். இயேசு பிரசங்கித்த மலைப்பிரசங்கத்திலே மத்தேயு 5 அதிகாரத்திலிருந்து 7 அதிகாரம் வரை பாவத்தை குறித்த அறிவுணர்வை இலக்காய் கொண்டே சொல்கிறார்.

பரிசேயர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை கண்டிப்பாய் பின்பற்றுகிறவர்களாயினும், இரட்சகர் அவர்களுக்கு தேவை என்று உணர தவறிவிட்டார்கள். அவர்கள் நினைத்ததற்கெல்லாம் அபராதம் விதித்தார்கள்.

அவர்களுடைய பதவியின் பெலத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி அவர்களுடைய பெலவீன சகோதர சகோதரிகளிடத்தில் தண்டனையை நிறைவேற்றினார்கள். பரிசேயர்கள் சிரேஷ்டமான பூரணமான வாழ்க்கை வாழ்வதுபோல் குறைந்தபட்சம் வெளிப்புறமாய் தோன்றினார்கள். அவர்கள் ஒவ்வொரு நியாயப்பிரமாணங்களையும் வெளிப்புறமான நடத்தையில் கருத்தில்கொண்டு செயற்பட்டார்களே யன்றி இருதயத்தின் மனோநிலையிலோ மக்கள் மீது அலட்சியமானவர் களாயும், கர்வமானவர்களாயும், இரக்கமற்றவர்களாயும் காணப் பட்டார்கள்.

இயேசு கூறினார் நமது நடத்தைகளை தேவன் நியாயந்தீர்க்கும்போது நியாயப்பிரமாணப்படி சிறிய காரியங்கள் என்று பாராமல் எமது எண்ணங்களேயே பார்க்கிறார். கோபம் கொலைசெய்வதற்கு சமானமாய் கருதப்படுவது போல: அதுபோல் அசுத்தம், விபச்சாரம் என்பன கூட கருதப்படும்.

இது சட்டதிட்டங்களினதும், நியாயப்பிரமாணங்களினதும் வெளியரங்க மான நிறைவேற்றுதல் அல்ல இருதயத்தின் மனச்சார்பு அடிப்படை யானது. எமது செயல்களுக்கு பின்னால் இருக்கும் நோக்கங்களும், எண்ணங்களும் நல்லதா கெட்டதா என்று கணிப்பிடப்படுகிறது. நீங்கள் ஒரு நல்ல தர்ம காரியத்தை செய்தபோதிலும் அது தனிப்பட்ட மதிப்பிற்காக செய்யப்பட்டால் அந்த தர்மசெயலானது உங்களுக்கு விரோதமான பாவமாகும்.

> *''மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பா யிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும். உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினா லும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்: உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிர மத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள். ''* மத்தேயு 23:27-28

> *''மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத் திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித் திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தை யும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். இவைகளையும் செய்யவேண்டும். அவைகளையும் விடாதிருக்கவேண்டும்.''* மத்தேயு 23:23

> *''வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும், உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லு கிறேன்'' மத்தேயு 5:20*

எங்களுடைய நீதியானது அவர்களுடையதை விட அதிக மாயிருக்க வேண்டுமா? அவர்களுடைய நடத்தையில் அவர்கள் பூரணமானவர்களாய் இருக்கவேண்டியவர்கள்.

*“மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற் குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காம விகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.”* மாற்கு 7:20-23

*“எல்லாவற்றையும் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? ”* எரேமியா 17:9

கோபம், பொறாமை, எரிச்சல், அசுத்தம், தோல்வி, சுயபரிதாபம் என்பன காணக்கூடிய சில காரியங்கள் ஆகும். பாராட்டுதல், பெருமை, சுயதிருப்தி, சுயநீதி, என பட்டியலிடக்கூடிய பல குணாதிசயங்கள் யாரோ ஒருவருக்கு அல்லது ஏதாவது ஒன்றுக்கு மகிமை செலுத்துகிற எல்லாவற்றையும் தேவன் பெரிய பாவமாகவே கருதுகிறார். எமது இருதயமே மிகவும் திருக்குள்ளது. எம்மை பாவிகளாக மாற்றும் இரண்டு காரியங்கள் உண்டு: முதலாவது, இந்த சிந்தனைகளில் நாம் தங்கியிருத்தல், இரண்டாவது, நாங்கள் இப்படி கிரியை செய்வதில்லை என்றும் பாவம் செய்வதில்லை என்றும் நினைத்தல்.

நாங்கள் இவைகளில் கிரியை செய்தாலும் அல்லாவிட்டாலும், இவைகளும் மற்றைய பாவங்களும் மரணத்திற்கூடாக தண்டிக்கப் படுகிறது. யாரும் அதை காண மாட்டார்கள், அவைகள் எமக்கு மிகவும் சாதாரணமானதாய் இருப்பதால் நாம் அறிந்திருப்பது குறைவு. நாம் வெளிப்புறத்தை நன்றாய் கவனிக்கிறோம். ஆனால் உள்ளே பரிசேயர்களை போல நேர்மையற்றவர்களாய் இருக்கிறோம். அதனால் தான் தாவீது இப்படிச் ஜெபம் செய்தார், *‘‘தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும். அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.’’* (சங்கீதம் 19:12-13)

*“நாங்கள் பாவம் செய்வதால், பாவிகளல்ல. நாங்கள் பாவிகளாய் இருப்பதால் பாவம் செய்கிறோம். ”*

நாம் உண்மையை அறிந்திருந்தும், நாம் தேவனிடம் முதன் முறை யாக வந்தபோது எமது பாவச்செயல்களிலே நாம் மரித்திருந்தோம். அதன்பிறகு எமக்கு விருப்பமான முறையில் தொடர்ந்தும் வாழ முடியாது. இன்று உலகத்தாருக்கும் விசுவாசிகளுக்கும் இடையில் பெரிதான வித்தியாசம் இல்லாதிருக்கிறது. உலகத்தார் வெற்றி என்று கருதுவதையே (அளவிடுவதையே) கிறிஸ்தவர்களும் கருதுகிறார்கள்.

என்ன ஆச்சரியமென்றால் அநேக கிறிஸ்தவர்கள் அவர்களுடைய வாழ்க்கையை தேவனுக்கு பிரியமான முறையில் வாழ்வதில்லை. ஆனால் அவர்கள் தாங்களே தவறுகளை செய்து கொண்டு மற்றவர்கள் தவறுகளுக்காக நியாயத்தீர்ப்பிலே தண்டனை கிடைக்க வேண்டும் என எண்ணுகிறார்கள்.

தேவனுடைய பார்வையில், பெரிய பாவம் சிறிய பாவம் என்றில்லை. நிச்சயமாக குருக்களாட்சி இல்லை. எல்லாப் பாவங்களும் ஒரே முக்கியத்துவமுடையவை – மரணம். எங்களுடைய காரியத்தைப் பாராமல் மற்றவர்களுடைய கோபம், எரிச்சல், கசப்பு அல்லது பொறாமை என்ற குணாதிசயங்களுக்காக தேவன் அவர்களை தண்டிக்க வேண்டும் என நாம் எதிர்பார்த்தலானது எம்மை பகுத்தறிவு இல்லாவர்களாக்குகிறது. குறிப்பிட்ட சில பாவங்கள் தேவனுடைய இரட்சிப்பை இழக்கச் செய்கிறது என்று நாம் உறதியாக கூறுவோ மானால், நாம் எம்மை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து எம்மை தேவன் தீர்க்கிற தீர்வின்படியே மற்றவர்களையும் நாம் தீர்க்க வேண்டும். (மத்தேயு 7:2)

## பாவத்தின் உற்பத்தி ஸ்தானம்

இப்பிரபஞ்சத்தின் முதல் பாவத்தை இப்போது பார்ப்போம்!

ஏசாயா 14:12-15

*"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே*
*நீ வானத்திலிருந்து விழுந்தாயே!*
*ஜாதிகளை ஈனப்படுத்தினவனே,*
*நீ தரையில் விழ வெட்டப்பட்டாயே!*
*நான் வானத்துக்கு ஏறுவேன்,*
*தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக*
*(நான்) என் சிங்காசனத்தை உயர்த்துவேன்*
*(நான்) வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,*

*நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்.*
*(நான்) உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும்*
*நீ உன் இருதயத்தில் சொன்னாயே.*
*ஆனாலும் நீ அகாதமான*
*பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்.*



மேலே சொல்லப்பட்ட பகுதியில் எத்தனை தடவைகள் ‘‘நான்’’ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என நீங்கள் காணலாம். ஐந்து தடவைகள்! பாருங்கள் உங்கள் விருப்பங்களை தேவனுக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கும் போது உங்கள் இருதயத்தில் எத்தனை கலகம் வருகிறது என்று பாருங்கள். சாத்தான் ‘‘பெருமை’’ யினிமித்தம் தேவனுக்கு விரோதமாய் கலகம் பண்ணினான். ஆயினும் அவன் அவனை பின்பற்றிய மூன்றிலொரு பங்கு தேவதூதர்களோடு துரத்தப்பட்டான். எனவே, முதல் பாவம் பெருமை தான்.

*பரலோகம் இழக்கப்பட்டது* என்ற ஒரு கற்பனைக்கதை ஜோன் மில்டன் என்பவரால் ஓவியமாகத் தீட்டப்பட்டது. இதில் பரலோகத்தில் தேவனை துதிக்க விரும்பாத, தேவனுடைய இடத்தை பெறவிரும்புகிற கலகத்தை உண்டுபண்ணுகிற சாத்தானுடைய குணாதிசயத்தை வெளிப்படுத்து கிறது. மனந்திரும்பாத அவன், பரலோகிலிருந்து விரட்டப்பட்டவன். ‘‘நரகத்தை ஆளுவதைவிட பரலோகில் பணிவிடை செய்வது மேலானது’’. சாத்தானுடைய கலகத்திற்கு பெருமை என்ற குணாதிசயமே வேராயிருந்தது. அவன் ஆளுகை செய்ய விரும்பினான். மேலான தேவனுடைய ஆசனத்தில் அமர விரும்பினான். அனை வருடைய கவனத்தையும் ஈர்க்கும் மத்திய இடத்தில் இருக்க விரும்பினான். சாத்தானுடைய கலகத்தினால் அவனும் அவனுடைய மூன்றிலொரு பங்கு தேவதூதர்களும் பரலோகிலிருந்து துரத்தப் பட்டதுடன், எல்லாவித தீயகிரியைகளுக்கும் வேராயிருக்கிற பெருமை என்ற பாவத்திலிருந்தே எல்லா கெட்ட செயல்களும் வருகின்றன. ‘‘பெருமை எல்லா தீய கிரியைகளுக்கும் வேராயிருக்கிறது.’’

உலகத்தின் முதல் பாவம் என்ன? தேவனுடைய வார்த்தைக்கு ஆதாமுடைய கீழ்ப்படியாமை தான் அது. நீங்கள் அதை அடையாளம் காணலின் பிழையான நிலை என்றழைக்கலாம். ஆதாம் தன்னை அடையாளம் காணல் பற்றிய பொய்யான விடயத்தை நம்பினான். ஆதாம் பாவம் செய்தபோது, ஏதேன் தோட்டத்திலிருந்து அவன் துரத்தப்பட்டான். அவனுடைய மகன் காயின் ஆபேலை கொலை செய்து பாவம் செய்தான். தேவன் அவனை சபித்தார். ஏன்? ஆதாமுடைய பாவம் அவனை பாதித்தது. ஆனால் காயினுடைய பாவம் (ஆதியாகமம் 4:1) மற்றவனையும் பாதித்தது. ஆகவே மற்றவனுக்கு விரோதமாய் நீ பாவம் செய்யும்போது, தேவன் அதை அதிகமாய் கவனத்தில் கொள்வார். இந்தப் பாவம் பொறாமை அல்லது பகையினால் ஏற்பட்டது. பெருமையும், பொறாமையும் அநேக பாவங்களுக்கு வேராயிருக்கிறது. அதைப்பற்றி யாக்கோபு 3:16 இல் அழகாய் சொல்லப்பட்டிருக்கிறது.

> *வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு.*

இந்த பாவங்களைப்பற்றிச் சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள். உங்களை மட்டும் பாதிக்கிற நீங்கள் உடன்படுகிற பாவங்கள் அநேகம் இருக்கும் என்று என்னால் நிச்சயமாய் கூறமுடியும். இந்த பாவங்கள் ஆதாமுடைய பாவ வகையைச் சேர்ந்தது. இப்போது சிந்தியுங்கள், நீங்கள் உடன்படுகிற சில பாவங்கள் மற்றவர்களையும் பாதிக்கும். இப்படிப்பட்ட பாவங்களும் அதிகம் இருக்கும் என நம்புகிறேன். இது காயினுடைய பாவ வகையைச் சேர்ந்தது. இதன் கருத்தை விரிவாகப் பார்ப்போமானால், என்னுடைய வாழ்க்கையில் ஒப்பிட்டு பார்க்கிறேன். எனக்கு இரு மகன்கள் உண்டு. உதாரணமாய் சொல்வோமானால் ஒருவன் உதவியற்றவனாய் இருக்கும்போது மற்றவன் அவனை அடித்தால், நான் அதைப் பார்த்துவிட்டு அமைதியாய் ஒன்றும் செய்யாமல் இருப்பேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தேவனும் இந்நிலையில் இப்படித்தான்.

இந்த இரண்டு வகை பாவங்களை குறித்து துரதிஷ்டவசமாக தேவசபைகள் இன்னும் அடையாளம் காணாதிருக்கின்றன. முழு கிறிஸ்தவ சமுதாயத்திலும் நாம் இந்த பிரச்சினையை காண்கிறோம். விசுவாசிகளுக்குள், மற்றவரை பற்றி புறம்பேசுகிறவரை விட குடிப்பவர்களை நாங்கள் சீக்கிரமாய் கண்டனம் செய்கிறோம். ஒருவனுடைய கோபத்தைவிட புகைத்தல் மிகப்பெரிய பாவம் என நாம் கருதுகிறோம். நீங்கள் பிறருடைய பணத்தை திருடினால் அது களவு. மற்றவரைப் பற்றி தவறாகப் பேசினால் அது புறம்கூறல் என்கிறோம். இதனால் இன்னொருவருடைய நல்ல பெயரை களவாடுகிறோம்

என்பதை புரிந்து கொள்ளாமலிருக்கிறோம். நான் மேலே பந்தியில் விளக்கியதுபோல நாம் மற்றவர்களை அவதூறாகப் பேசும் போது தேவன் நம்மை குற்றம் செய்பவனாகக் காண்கிறார். நாம் தேவனுடைய கண்மணியாய் இருப்பதுபோல எம்மால் தூஷிக்கப்பட்ட அவன் அல்லது அவளும் தேவனுடைய இருதயத்திற்கு பிரியமானவர்களே. இந்த தோற்றத்தை ஒவ்வொரு சோதனையிலும் எமது நாவு தவறாக பேசுவதை தடுப்பதற்கு மனதில் கொள்ளலாம்.ட நாம் திருடினால் மனந்திரும்பி பணத்தை திரும்ப கொடுக்கலாம். ஆனால் இன்னொரு நபருடைய இழக்கப்பட்ட நல்லபெயரை திரும்ப உங்களால் கொடுக்க முடியுமா? இந்த பாவத்தின் மரண படுகுழியை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

பொறாமைப்பற்றி இன்னொரு பாடத்தில் தெளிவாக கற்றுக் கொள்வோம். பொறாமையானது எப்போதும் மரணத்தை உண்டாக்கு கிறதாயிருக்கிறது. மறுபுறத்தில் அது எல்லா சந்தர்ப்பங்களிலும் தவறல்ல. இந்த இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை காண்பிக்க விரும்புகிறேன். எமது தேவன் (எரிச்சலுள்ள) பொறாமையுள்ள தேவன். அவர் நம்மைக்குறித்து பொறாமை உடையவராய் இருக்கிறார். அவர் நாம் சாத்தானால் பிழையான வழியில் வழிநடத்தப்படுவதை பொறுத்துக் கொள்ள முடியாதவராய் இருக்கிறார். பொறாமை என்பது உங்களுக்கு சொந்தமானதை நீங்கள் பாதுகாத்துக் கொள்வதற்காக இலகுவற்ற வகையில் கோபப்படுதல் ஆகும். மற்றவர்களுக்கு சொந்தமானதை கண்வைத்தால் அது பொறாமை ஆகும். இந்த வேறுபாட்டை இன்னும் விளங்கவைத்தால், என் மனைவி எனக்கு சொந்தமாயிருப்பதால் அவளை குறித்து நான் பொறாமைப்படுகிறேன். ஆனால் நான் மற்றவனுடைய மனைவியை அழகான மனைவி என்று சொல்வேனானால், நான் பொறாமையினால் பாவம் செய்கிறேன்.

இப்போது, நீங்கள் உடன்படுகிற மற்றவர்களை காயப்படுத்திய பாவங்களை வரிசைப்படுத்த நேரம் ஒதுக்குங்கள். (உங்கள் குறிப்பு புத்தகத்தில்) இந்தப் பாவங்கள் மற்ற எல்லாவற்றையும் விட கெட்டது என உணர்ந்து கொள்ளுங்கள். இதற்குபிறகு, நீங்கள் புகைப்பவர்களை, குடிகாரர்களை, மது போதைக்கு அடிமையான வர்களை கண்டால் அவர்கள் எல்லோரும் உங்களை விட மேலான வர்கள் என தாழ்மையாய் சிந்தியுங்கள். காணக்கூடிய பாவங்களின் மீது இரக்கமுள்ளவர்களாய் நீங்கள் இருக்க உங்களை உற்சாகப் படுத்தவில்லை. அவர்களுக்குள் இருக்கும் அல்லது வெளியே தெரியும் பாவங்களை நீங்கள் வெறுக்க வேண்டும்.

இயேசு பாவத்தை வெறுத்து நீதியை நேசித்தார்:

> *"நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர். ஆதலால், தேவனே உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்."* எபிரேயர் 1:9

நாம் அவருடைய சீஷர்களாக மற்றவர்களுடைய வாழ்க்கையில் அல்ல எமது சொந்த வாழ்வில் பாவங்களை வெறுத்து அவரை பின்பற்ற வேண்டும். நீங்கள் பாவத்தை வெறுத்து பாவத்தை பாவம் என்று அறிக்கை செய்யாவிடில், நீங்கள் அவைகள் எல்லாவற்றிலும் இருந்து விடுதலையாக முடியாது.

நாம் ஆவிக்குரிய வளர்ச்சியடைந்தவர்களாய் தேவனுடைய நீதியும் பாவமும் வெளியரங்கமான தோற்றத்தில் மாத்திரமல்ல உள்ளான தோற்றத்திலும் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். பழைய ஏற்பாட்டில் அது பத்து கற்பனைகளாய் இருந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் வாழ்க்கையாய் இருக்கிறது. நியாயப்பிரமாணம் மோசேயினூடாக கொடுக்கப்பட்டது. ஆனால் கிருபையும் உண்மையும் இயேசு கிறிஸ்துவின் ஊடாக வருகிறது.

> *உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.* ஏசாயா 59:2

> *ஆவியை அவித்துப்போடாதிருங்கள். தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.* 1 தெசலோனிக்கேயர் 5:19-22

## பாவத்தைப் பற்றி பழைய உடன்படிக்கையிலும் புதிய உடன்படிக்கையிலும் சொல்லப்பட்ட கருத்துரைகள்

பழைய உடன்படிக்கையில் பாவம் முக்கியமாக வெளிப்புறமான காரியமாகவே கருதப்பட்டது. பத்து கற்பனைகளை கண்ணோக்கினால், பிறனுடையதை இச்சியாதிருப்பாயாக என்ற கற்பனை ஒன்று மாத்திரம் வெளியரங்கமான பரிசுத்தத்தை சொல்கிறது. தேவன் அவர்களுக்கு இதுவரை அவர்கள் தங்களை தாங்களே இரட்சித்து கொள்ள முடி

யாது அவர்களுக்கு இரட்சகர் தேவை என்று கிரகிக்கும் தன்மையை கொடுத்தார். அவருடைய ஜனங்கள் தேவ திட்டத்தை முழுமையாக இழந்துவிட்டார்கள். அதன் பலனாக, தேவன் பழைய உடன்படிக்கை யிலிருந்து புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இயேசுவும் தீர்க்கதரிசிகளும் அதனை நிறைவேற்றினார்கள். (ரோமர் 10:4)

மேலும், 6வது கற்பனையின்படி, ‘‘விபச்சாரம் செய்யாதிருப்பாயாக’’ என்ற சட்டத்தை கடைபிடிப்பது, நான் என் சொந்த மனைவியை நேசிப்பதால் இதுவரையில் நான் விபச்சார பாவத்திற்கு உடன்படாதிருக்கலாம். ஆனால் புதிய உடன்படிக்கையில் நான் இச்சையோடு ஒரு பெண்ணை பார்த்தாலே விபச்சார பாவத்திற்கு உடன்படுகிறவனாகிறேன். கிறிஸ்து சபையை நேசிப்பது போல நான் என் மனைவியை நேசிக்க வேண்டும். ஆகவே புதிய உடன்படிக்கையின் கீழ் எமது வெளியரங்கமான கிரியகைள் மாத்திரமல்ல. உள்ளான எண்ணங்களும் நியாயந்தீர்க்கப்படும். இயேசுவின் வழியில் உள்ளான பரிசுத்தம் வெளியரங்கமான பரிசுத்தத்தை பிரதிபலிக்கிறது. அது உயர்நிலையை அடைய பாளமாய் அமைகிறது.

மத்தேயு 12:35 இல் சொல்லப்பட்டபடி: *நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான். போல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்.*
அதுபோலவே மாற்கு 7:21-23 இல் சொல்லப்பட்டபடி: *எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவு களும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகார மும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்தி லிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.*

இயேசு இருதயத்தில் உள்நினைவிலே என்ன இருக்கிறது என்று சொல்லியது தெளிவாய் இருக்கிறதல்லவா?

இயேசு பூமியிலிருக்கும் போது கடுமையாய் சொல்லிய பாவங்கள் எவை? இயேசு வெறுத்த பாவங்கள் 10 கற்பனைகளில் கூட சொல்லப்படவில்லை என நீங்கள் ஆச்சரியப்படக்கூடும்.

புதிய ஏற்பாட்டின்படி பாவத்தை விளைவிக்கும் மூன்று பகுதிகளை பார்ப்போம்?

*பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்.*
1 தீமோத்தேயு 6:10

மேலே சொல்லப்பட்ட வசனத்தின்படி, பணம் ஒரு பிரச்சினை அல்ல. பணத்தின் மீது உள்ள ஆசைதான் பிரச்சினை. விசுவாசிகளும் ஊழியங்களும் கூட இதனால் தவறான வழியில் நடத்தப்படுகிறார்கள். எப்படியாயினும் செழிப்புக்குரிய பணத்தை பற்றி பின்பதாக கற்றுக்கொள்வோம்.

பொறாமையும், சுயநலமும் அழுத்தம் பெறும் வகை கீழே வரிசைப்படுத்தப் படுகிறது.

*வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு.* யாக்கோபு 3:16

எல்லாத் தீமைகளுக்கும் வேராய் இருப்பவை

- பணத்தின் மீதான ஆசை
- பொறாமை
- சுயநலம்

இவைகளை பற்றி விபரமாக பின்பதான பாடங்களில் பார்ப்போம்.

## ஐந்து பெரிய பாவங்கள்

தலைப்பில் சொல்லப்பட்ட விதமாக கீழே குறிப்பிடப்படும் பகுதிகளில் நாம் குறிப்பாய் கவனமாயிருக்க வேண்டிய ஐந்து பெரிய பாவங்களை கவனிக்க போகிறோம். எண்ணிலடங்கா பாவங்கள் தேவனுடைய கோபத்தை எழுப்பி விட்ட போதிலும் நாம் மற்ற அநேக பாவங்களை கவனிக்கும்போது இவைகள் எமது அவதானத்தை விட்டு இலகுவில் வழுவி விடக்கூடும்.

### *1) பெருமை*



இப்பிரபஞ்சத்தின் முதல் பாவமானது இன்னும் தீவிரமாக நம் மத்தியில் அதிலும் குறிப்பாக பரிசுத்த வாழ்வை அநுசரிப்பவர்கள் மத்தியில் இருக்கிறது. தேவனுக்கு ஊழியம்

செய்யும் கிறிஸ்தவர்கள் எல்லாருடைய வாழ்வில் சாத்தான் நுழைவதற்கு இது சாத்தானுடைய பிரதான நுழைவாயிலாய் இருக்கிறது. இயேசு மத்தேயு 23ம் அதிகாரத்தில் அதிகமாய் பாசாங்கு (நடித்தல்) செய்தலை கடிந்துகொண்ட போதிலும் இப்படி நடித்தலின் மூலவேர் பெருமையாகும். ஆகவே நான் சொல்ல விரும்புவதாவது, ஆவிக்குரிய பெருமை இயேசு அதிகமாய் கடிந்து கொண்ட ஒரு காரியமாகும். (மத்தேயு 23:4-7 வாசியுங்கள்)

> *''இதோ அகங்காரியாயிருக்கிறானே. அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல. ''* ஆபகூக் 2:4

இந்த வார்த்தையிலிருந்து பெருமையானவனுடைய ஆத்துமான செம்மையானதல்ல என்பதை நாம் காணலாம். அத்தோடு தேவனுக்கு முன்பாகவும் அவன் சரியானவனல்ல.

Titanic (பிரமாண்டமானது)!

மற்றைய பாவங்களைவிட பெருமை என்ற பாவத்தை இனங்கண்டு கொள்வது மிகவும் கடினமானது. ஏனென்றால், இயல்பாக ஒருவன் தன்னை மிதமிஞ்சி எண்ணுதல் என்று பொருள்படுகிறது.

> *ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்.* கலாத்தியர் 6:3

பெருமையானது உங்களை நீங்களே வஞ்சித்து கொள்ள செய்கிறது. நீங்கள் உங்களையே வஞ்சித்து கொள்ள இடம் கொடுப்பீர்களானால், நீங்கள் உங்களாலே வஞ்சிக்கப்பட்டு இருக்கிறீர்கள் என உணர்வது மிகவும் கடினமானது. ஒரு பயிற்சியாக, நீங்கள் உங்கள் பேச்சை பரிசோதிக்கிறீர்கள் எனக்கொள்வோம். கீழே தரப்பட்டவைகள் உங்கள் பேச்சில் இடம்பெறுகிறதா எனப் பாருங்கள்.

- மற்றவர்களுடைய பாவங்களை குறித்து
- பாசாங்கு (ஏமாற்றல்) செய்தல் பற்றி
- கசப்புத்தன்மை
- அலட்சியம் அல்லது நிந்தனை
- மரியாதையை அதிகாரமாய் பெறல், கௌரவத்தை எதிர்பார்த்தல்
- தாலந்துகளை, வரங்களை, ஆற்றல்களை குறித்த பெருமை
- ஒழுங்குமுறைகள், உருவாக்கல், ஆவிக்குரிய தலைமைத் துவம், மதஅறிவு என்பன குறித்த பெருமை

நீங்கள் உங்களுக்குள் பெருமைக்கு இடம் கொடுத்திருக்கிறீர்களா என பார்ப்பதற்கு மேலே கொடுக்கப்பட்ட பகுதிகள் உதவும் என நம்புகிறேன்.

ஆகவே,

> *அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே, ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.* யாக்கோபு 4:6

> *ஆகையால், ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.* 1 பேதுரு 5:6

இது ஒரு எடுத்துக்காட்டான உதாரணம், லூக்கா 18:9-14 ஆவிக்குரிய பெருமையுடைய ஒரு மனிதன் பாவி ஒருவனை நிந்தித்து தன்னை குறித்து உயர்வாய் பேசுகிறான். ஆந்த பெருமையுள்ள மனிதன் தன்னை பற்றி உயர்வாகப் பேசி தனக்குத்தானே மகிமையை பெற்றுக் கொள்கிறான். இறுதியில், பாவி மன்னிப்பை பெற்றுக் கொண்டான. ஆனால் பெருமையுள்ள மனிதனோ வெறுங்கையனாய் இயேசுவால் கண்டனம் செய்யப்பட்டான்.

நவீன சகாப்தத்திலுள்ள பெரிய வேத ஆராய்ச்சியாளரான (C S Lewis) சி. எஸ். லுயிஸ் என்பவர் ‘‘பெருமை’’ என்பது எல்லா பாவத்தை விடவும் பெரியது என அவருடைய ‘‘கிறிஸ்தவ நடத்தை’’ என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

> *கிறிஸ்தவர்கள் சரியானவர்கள் தான். உலகம் தோன்றியதிலிருந்து ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு தேசமும் துக்கப்படுதவற்கு பிரதான காரணமாக பெருமை அமைகிறது. மற்றைய துர்க்குணங்கள் சிலவேளைகளில் ஜனங்கள் சேர்ந்து இருக்க தடையாய் இருப்பதில்லை. நீங்கள் போதைக்கு அடிமையானவர்களோடும், பரிசுத்தமில்லாதவர்களோடும் நல்ல நண்பத்துவத்தையும், ஐக்கியத்தையும் வைத்திருக்க முடியும். ஆனால் பேரமை எப்போதும் வெறுப்பை உண்டாக்கும். அது ஒரு துர்குணமாகும். மனிதனுக்கு மனிதனுக்குமிடையிலான (பகை) வெறுப்பு மட்டுமல்ல. தேவனுக்கு விரோதமானதுமான துர் எண்ணமாகும்..*

ஆகவே பெருமையானது எப்படி அவர்கள் பெருமையற்றவர்கள் என சிந்திக்க வைத்து முட்டாளாக்குகிறது? இலகுவாக கற்பனையில்

தேவனை சிருஷ்சித்து கொண்டு தானாகவே தங்களை சந்தோஷப் படுத்தும் கற்பனையை உருவாக்கி தேவனுக்கென்று அவர்கள் செய்யும் காரியத்தில் திருப்தியடைகிறார்கள். தேவன் தங்களை குறித்து திருப்திடைகிறார் என நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் நல்லவர்கள் என சிந்திப்பதனால் தேவனுடைய பிரசன்னத்தி லிருந்து விலகியிருக்கிறார்கள்.

## ஆவிக்குரிய பெருமையை மேற்கொள்வது எப்படி?

**i**) ஜெபம்

மற்றவர்களோடு ஜெபம் செய்வதற்கு தேவன் உங்களுக்கு உதவுமாறு தேவனிடம் கேளுங்கள். உங்களை சூழ்ந்துள்ள வட்டாரத்திலுள்ளவர்கள் உங்களைப் பற்றி சுதந்திரமாய் வெளிப்படுத்த நீங்கள் இடமளிக்கலாம். அவர்கள் யார் என்றும் அல்லது அவர்களுடைய தராதரம் என்ன என்றும் உண்மையாக அவர்களுக்கு உங்களுடைய வாழ்க்கையை பற்றி பேசகூடுமா என்று கருதாமல் இடமளிக்கலாம்.

### **ii**) நீங்கள் பாவிகள் என அறிந்துகொள்ளுங்கள்

உண்மை என்னவென்றால், நான் ஒரு பாவி. நானும் ஒருவன் மாத்திரமல்ல, நான் தான் பாவி.

> *‘‘ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான்.’’* லூக்கா 18:13

“*நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களா யிருப்போம்.”* - 1 யோவான் 1:8 உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் தேவன் யார் என்ற பணிவோடு கூடிய அச்சத்தை கொண்டுவரும் தேவ கிருபையை நீங்கள் காண வேண்டும். எமது வாழ்க்கையில் தேவ கிருபையில்லாமல் ஒன்றுமில்லை என புரிந்து கொள்ளக்கூடிய இடத்திற்கு வரவேண்டும்.”

### **iii**) எப்பொழுதும் தேவனுக்குள் மேன்மை பாராட்டுங்கள்

அப்போஸ்தலர் பவுல் அவருடைய வாழ்க்கைக்கான இந்த கிருபையை நன்றாய் புரிந்து கொண்டிருந்தார். கீழே சொல்லப்பட்ட பிரமிக்கச் செய்யும் இரு வசனங்களும் அவருடைய சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் கடமையை நிறைவேற்றியதானது அவரது பெலத்தால் ஆகவில்லை. தேவ கிருபையினாலேயே எல்லாமானது என தெளிவாய் சொல்கிறது.

*ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்: அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை: அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது.*

1 கொரிந்தியர் 15:10

*புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை. இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்.* ரோமர் 15:18-19

## 2) பாசாங்கு செய்தல் (நடித்தல்)



கீழே சொல்லப்படுகிறபடி பாசாங்கு என்னும் சொல்லின் அர்த்தமானது ஒரு நடிகர், நாடகவியலாளர், வேஷம் போடுபவர், வேறு ஒருவராக நடிப்பவர். ஆங்கிலத்தில் இப்போகிரசி (பாசாங்கு) என்று அழைக்கப்படும் இச்சொல்லானது ஆங்கில மொழியில் மொழிபெயர்க்க முடியாத சொல்லாகும். ஆங்கிலத்தில் பெப்டிசம் (ஞானஸ்நானம்) என்பது போல்.

பாசாங்கு செய்தலானது நீங்கள் இருப்பதைவிட பரிசுத்தமானவராய் காண்பித்து மற்றவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறது. அதேவேளை அது பிழையானது மட்டுமல்லாது பொய் செய்வதாகும். மத்தேயு 23 அதிகாரத்தில் (வாசியுங்கள் மத்தேயு 23:13-29) 7 தடவைகள் இயேசு பரிசேயர்களை கண்டித்தார்.

அநேக நடிகர்கள் அல்லது நவீன காலத்தில் புகழ்பெற்றவர்கள் போலியான வாழ்க்கையை வாழ்கிறார்கள். அவர்கள் தங்களுடைய தோற்றத்தை அல்லது தேவைகளை தேடி விருத்தியடைகிறார்கள். இங்கே மத்தேயு புத்தகத்தில் இந்த மதத் தலைவர்கள் உபவாசமிருந்து ஜெபித்து, தசமபாகம் செலுத்தி, சந்தைவெளிகளில் ஜெபித்து பார்வைக்காக சத்தமாய் நீண்ட ஜெபம் பண்ணுகிறார்கள்.

ஆனால் அவர்களுடைய உள்ளான வாழ்க்கை மிகவும் கெட்டதாய் இருக்கிறது.

''பரிசேயர்'' என்ற சொல்லின் அர்த்தமானது ''பிரித்தெடுக்கப்பட்ட'' என்பதாகும். வேத பாரகர்கள் என்றால் நியாயப்பிரமாணங்களை கற்றுக் கொடுப்பவர்கள். மல்கியா புத்தகத்தில் முதல் இரண்டு அதிகாரங்களையும் வாசிப்பதற்கு நேரம் செலவழியுங்கள். இந்த மதகுருமார்கள் பயபக்தியற்ற நிலையில் பலிகளை செலுத்தியதையும், கிரியைகள் எல்லாவற்றிலும் மனிதரை திருப்திபடுத்தும் காரியங்களை செய்து தேவனுக்கு முன்பாக உண்மையான நமஸ்கார பலிகளை செலுத்தாமலிருப்பதையும் தேவன் கண்டிப்பாக நாம் இங்கே காணலாம்.

இதைப்போன்ற ஒரு காரியத்தை பார்ப்போமானால், ஒரு கணவர் தன் மனைவி வீட்டு வேலைகளை செய்யாமல் தொலைக்காட்சி பார்க்கிறாள். பிள்ளைகள் தங்கள் வீட்டு வேலைகளை அலட்சியம் செய்துவிட்டு, ஆறுதலாய் விளையாடுகிறார்கள் என (அதிருப்தி) முறைப்பாடு செய்துவிட்டு, பிறகு ''கால்பந்து விளையாட்டு (சீசன்) காலம் முடிந்தபிறகு செடலய்ட் தொடர்பை துண்டித்து விடுவேன்.'' என்கிறார். இது பாசாங்கு (நடிப்பு) இல்லையா?

> *அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள். கிரியைகளினாலோ அவரை மறுதலிக் கிறார்கள். அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப் படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ் செய்ய ஆகாதவர் களுமாயிருக்கிறார்கள்.* தீத்து 1:6

கீழே தரப்பட்டுள்ள காரியங்களில் (நடிப்பதை) பாசாங்கு செய்வதை விட்டுவிடுவது அவசியமாகும்.

- கொடுத்தல் (மத்தேயு 6:1-4
- ஜெபம் (மத்தேயு 6:5-6)
- உபவாசம் (மத்தேயு 6:16-18)
- நீதிவிசாரிப்பு (மத்தேயு 7:1-5, லூக்கா 6:39-42)
- போதனைகள்
  (மத்தேயு 15:7-9, மாற்கு 7:6-8, 1 தீமோத்தேயு 4:1-3)
- செல்வாக்கு செலுத்தல் (லூக்கா 12:1-3)
- பகுத்துணர்வு (லூக்கா 12:54-57)

எனவே, இன்று உங்கள் வாழ்க்கையை பரிசோதிக்கும்படி நான் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். நீங்கள் யாரை சந்தோஷப் படுத்த விரும்புகிறீர்கள்? நீங்கள் தேவனுக்காக பரிசுத்தமாக வாழ்வ தாக மற்றவர்களுக்கு காண்பித்துகொண்டு உங்கள் சந்தோஷத்தை தேடுகிறீர்களா?

எப்படியாயினும், எனக்கு நிச்சயமாக தெரியும் இப்படிச் செய்யும் யாரோ ஒருவரை நீங்கள் நினைத்திருக்கக்கூடும், *ஆனால் நீங்கள் உங்களை நீதி விசாரிக்கவேண்டுமென விரும்புகிறேன்.*

3) அவிசுவாசம்

அவிசுவாசமானது தேவனைக் குறித்த விசுவாசத்திற்கு எதிராக இருப்பதுடன் எமது வாழ்வில் தேவன் கிரியை செய்ய முடியாதபடி தடைசெய்கிறார்.

> *அங்கே அவர் சில நோயாளிகள் மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல், அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு, கிராமங்களிலே சுற்றித்திரிந்து, உபதேசம்பண்ணினார்.* மாற்கு 6:5-6

அநேக கிறிஸ்தவர்கள், அவிசுவாசமானது தேவனுக்குள் பூரணமாக வளராததால் காணப்படும் பெலவீனம் என்கிறார்கள். எனவே இதனை முக்கியமான விடயமாக கருதுவதில்லை. இயேசு அவருடைய சீஷர்களுக்கு அவிசுவாசத்தை குறித்து எத்தனை தடவைகள் கடிந்து கொண்டார் என உங்களுக்குத் தெரியுமா?

1. மத்தேயு 6:30
2. மத்தேயு 8:26
3. மத்தேயு 14:31
4. மத்தேயு 16:8
5. மத்தேயு 17:17–20
6. மாற்கு 16:14
7. லூக்கா 24:25
8. யோவான் 20:27

> *சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.* எபிரேயர் 3:12

நாம் தேவனை அவிசுவாசிக்கும் போது உலகத்திலுள்ள பொல்லாத தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளுக்கும் நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும்போது தேவன் தன்னுடைய பிள்ளைகளை பராமரிப்பதில்லை தேவைகளை சந்திப்பதில்லை என அர்த்தப்படுத்துகிறோம். இது தேவனை நிந்திக்கிற காரியமாகிறது. நீங்கள் தேவனிடம் எதை கேட்டாலும் பெற்றுக் கொள்வீர்கள் என இந்நாட்களில் போலியான விசுவாசம் பற்றியும் பிரசங்கிக்கப்படுகிறது. தேவன் நாம் எமது அன்றாட வாழ்க்கையை வாழ்வதற்கு விசுவாசிக்க வேண்டுமென விரும்புகிறார்.

மேலும் இயேசு அவர்களுடைய அவிசுவாசத்தை குறித்து மட்டும் அதிசயப்படவில்லை. மாற்கு 6:1-6 இல், அவரிடத்தில் ஜனங்கள் வைத்திருந்த விசுவாசத்தை குறித்தும் ஆச்சரியப்பட்டார். ஒரு தடவை நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தை கண்டு ஆச்சரியப்பட்டார். இன்னும் இரு சந்தர்ப்பங்களிலும் அவர் வியப்படைந்தார். குஷ்டரோகி சுத்தமடைந்த போதும், சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீ தன் மகளுக்கு சுகத்தை பெற்றுக்கொண்ட போதும் வியப்படைந்தார். விபரமாக பார்ப்பதற்காக:

- இயேசு நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனை சுகப்படுத்தினார். மத்தேயு 8:5-13
- இயேசு குஷ்டரோகியை சுகப்படுத்தினார். லூக்கா 17:11-19
- சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய பெண்: மாற்கு 7:24-30

## 4) வெறும் வார்த்தைகளும் கிரியை இல்லாத்தன்மையும்




இயேசுவின் மறுவருகையிலே அவர் மத்தேயு 25:31-46 புத்தகத்தில் சொல்லப்பட்டபடி எல்லோரையும் நியாயந்தீர்க்கப் போகிறார். அவர் மனந்திரும்புதலின் கிரியைகளினால் அல்ல வார்த்தைகளினால் மாத்திரம் செயற்பட்ட அவருடையவர்கள் அல்லாதவர்களிடத்திலிருந்து தனக்கு சொந்தமானவர்களை பிரித்தெடுப்பார்.

*“அதற்கு ராஜா பிரதியுத்தரமாக மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்*

*செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். (மத்தேயு 25:40)*

மேலே நீங்கள் உங்கள் சகோதர சகோதரிகளுடைய தேவைகளை கவனத்தில் கொண்டு செயற்படுவீர்களானால் நீங்கள் அவருக்கே அதைச் செய்தீர்கள். மாறாக, நீங்கள் உங்களைச் சுற்றியுள்ள தேவைகளை காண்பீர்களானால், நீங்கள் அவருக்குச் செய்வதை தவறி விடுவீர்கள்.

*“அப்பொழுது அவர் அவர்களுக்கு பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.* (மத்தேயு 25:45)

தேவன் எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு எமக்கு சந்தர்ப்பம் வழங்குகிறார். ஆனால் நாம் அதை செய்யத் தவறி விட்டால் நாம் அவருக்கு கீழ்ப்படியவில்லை.

இறுதியாக,

*“அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.* (மத்தேயு 25:46)

ஆகவே, உங்கள் வார்த்தைகளோடு கிரியையும் இணைந்து செயற்பட வேண்டும். எல்லா மனிதருக்கும் நாம் நன்மை செய்ய வேண்டுமென கட்டளை பெற்றிருக்கிறோம். கலாத்தியர் 6:10 – *ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்.*

லூக்கா 10:25-37 இல் நல்ல சமாரியனுடைய உவமானக் கதையை பார்க்கும்போது, கிறிஸ்தவ அன்பானது மற்றவர்களை கருணையோடு உபசரிப்பதுடன், மரியாதை செய்து, அவர்களுடைய தேவையில் உதவுகிறதாய் இருக்க வேண்டும் என சொல்கிறார். – நாம் எப்படி பேசுகிறோம் அல்லது உணருகிறோம் என்பதை பற்றியதல்ல மாறாக, அந்தக் காரியத்தில் எமது கிரியை எப்படி இருக்க வேண்டும் என்பதை பற்றியதாகும். இக்கதையில் ஆசாரியனும், லேவியனும் தேவனை நேசிப்பது எப்படி என்று பிரசங்கிக்கிறவர்கள் சந்தர்ப்பம் வந்தபோது அதை தங்களுடைய கிரியையில் காண்பிக்க தவறிவிட்டார்கள்.

யூதரல்லாத சமாரியன் அவனை கடக்கும் போது இரக்கப்பட்டு, அவனை கவனித்து, அவனுடைய செலவுகளை தானே செலுத்தினான். இது கிரியையிலான அன்பு. தொடர்ந்தும் இந்தக் கதையில் 37வது வசனத்தில் இயேசு சொல்கிறார், ‘‘நீயும் போய் அந்தப்படியே செய்’’

லூக்கா 16:19-31 இல் அதைப்போலவே ஐசுவரியவானும், ஏழை லாசருவும் உவமானத்திலும் வியப்படையச் செய்யும் உண்மைகளை காணலாம.

1. தேவையுள்ள மனிதர்களுக்கு அன்பின் கிரியையாக செல்வத்தை உபயோகிக்காமை மிகப்பெரிய துஷ்ட செயலாகும்.
2. உண்மையை அறிந்திருந்தும் அதற்கிணங்க கிரியை செய்யாவிடில் நியாயத்தீர்ப்பிலே நித்திய தண்டனைக்கு வழிகோலும்.

*ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.* யாக்கோபு 2:15-17

*அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் அன்புகூரக்கடவோம்.* 1 யோவான் 3:16-18

## 5) முறுமுறுப்பு/ குறை கூறல்

முறுமுறுப்பு/ குறைகூறல் ஒரு பாவம் என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். துக்ககரமான விடயம் என்னவென்றால் இந்தப்பாவமானது சாதாரண கண்ணுக்கு அகப்படாத ஒருவித வைரஸ் போன்று மரணத்தை கொண்டு வருகிற தாக்கத்தை ஏற்படுத்தும். சாதாரணமான உணர்வுகளோடு ஆரம்பித்து ஓர் நாள் அழிவை ஏற்படுத்துகிற பாவமாய் முடிவுக்கு வருகிறது. முணுமுணுப்பு என்பதற்கான

வரைவிலக்கணம் என்ன என்று பார்ப்போம். பிடிவாதமாயிருத்தல், முறையிடுதல், மெல்லிய சத்தத்தில் முணுமுணுத்தல்.

அப்படியானால், முறையிடுதலுக்கும் முறுமுறுத்தலுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன? ஒரு மெல்லிய கோடு அளவிலான வித்தியாசமே இவை இரண்டிற்கும் இடையில் காணப்படுகிறது. முறையிடுதல் எப்பொழுதும் தவறானதல்ல. ஒருவரை கட்டியெழுப்புவதற்கு பதிலாக அவரைக் குறித்து உருவாக்கி விமர்சனம் செய்து, பிறரை நசுக்கி பிழையான வெளிப்பாட்டை செய்தால், அது பாவமாகும். உங்கள் வேலைத்தளத்தில், வீட்டில், உங்கள் ஆலயத்தில் மற்றும் பல இடங்களில் நீங்கள் தொடர்ந்து முறைப்பாடு செய்துகொண்டு இருப்பீர்களானால் அது முறுமுறுப்பு செய்வதற்கு வழிகாட்டும். உங்கள் கருத்துக்களை யாராவது, அந்தக் கருத்துக்களின் பெறுமதியை அவர்கள் கண்ட விதமாக சொன்னால், நீங்கள் அவருக்கு விரோதமாய் முறைப்பாடு செய்து முறுமுறுக்க தொடங்கிவிடுவீர்கள். அது உங்கள் கருத்தின் நியாயமான குறிப்பை பார்க்கத்தவறிவிடும். ஆனால், அந்த நடத்தைக்கு பின்னால் இருக்கும் நோக்கத்தை தேவன் கவனிக்கிறார் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்.

வேதாகமத்தின்படி இதன் முக்கியத்துவத்தையும், நிவாரணத்தையும் பார்ப்போம்.

உபாகமம் அதிகாரம் 1 வசனங்கள் 26-38 முறுமுறுத்தல் ∴ முறையிடுதல் என்பதன் இயல்புக்குணங்கள் கீழே குறிப்பிட்டு காட்டப்படுகிறது.

- அது இரகசியமாய் செய்யப்படுகிறது (வசனம் 26)
- அது தேவனுக்கு விரோதமானது (வசனம் 26-27, யாத்திராகமம் 16:18 இலும் இருக்கிறது)
- தேவனுடைய நோக்கத்தை பிழையாய் புரிந்திருத்தல் (வசனம் 27)
- கலகத்தை கொண்டுவருகிறது (வசனம் 26)
- உங்களையும் மற்றவர்களையும் அதைரியப்படுத்துகிறது (வசனம் 28)
- கடந்த காலத்தில் தேவன் செய்த நன்மைகளை நீங்கள் மறக்கும்படி செய்கிறது (வசனம் 29-33)
- இறுதியாக அவிசுவாசத்தில் முடிவடைகிறது. (வசனம் 32)

கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதாகமப் பகுதிகளில் குறிப்பிடப்படும் சம்பவங்களை வாசிப்பதற்கு நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்.

- எண்ணாகமம் 16
- மத்தேயு 20:1-16
- லூக்கா 5:29-32

இக்கட்டான நிலைமையில் செங்கடலை கடந்து மகத்தான வெற்றியை பெற்றவர்கள் பிற்காலத்தில் முறுமுறுத்து அழிக்கப்பட்டார்கள். விளக்க மாய் பார்ப்பதற்கு 1 கொரிந்தியர் 10:9-11

> *‘‘அவர்களில் சிலர் கிறிஸ்துவை பரீட்சைப்பார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள். அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனால் அழிக்கப்பட்டார்கள். அது போல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது. உலகத் தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.’’*

மேலே கூறப்பட்ட அந்தக் காட்சியை தெளிவுபடுத்துவதுடன் இஸ்ரவேலர் முறுமுறுத்த போது தேவன் சங்காரக்காரனால் அழித்தார். தேவன் முறுமுறுத்தலை பெரிய பாவமாக கருதுகிறார் என்பது இதிலிருந்து தெளிவாய் தெரிகிறதல்லவா. புதிய உடன்படிக்கையின் விசுவாசிகளாகிய நாம் எமது வழிகளை, சிந்தனைகளை, இருதயத்தின் எண்ணங்களை சீர்படுத்தாவிடில் அத்தண்டனையிலிருந்து எமக்கும் விலகியிருக்க முடியாது.

இயேசு மத்தேயு 12:43-45 வில் குறிப்பிட்டுள்ள காரியத்தை நாமும் கருத்தில் கொள்ள வேண்டும். முறையிடுதல் அல்லது முறுமுறுத்தல் மற்றைய பாவங்களைவிட மிகவும் கடினமாக தேவனுக்கு எதிராக போராடச் செய்கிறது.

> *‘‘அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி: அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்: அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை*

*அதிக கேடுள்ளதாயிருக்கும்: அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்."*

ஆகவே, தேவனுடைய ஆவியையும், ஒளியையும் நாம் கொண்டிருக்கிறோம் என்று புரிந்து கொண்டு, தொடர்ந்தும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பெற்றவர்களாய், மேலே பார்த்தபடி முடிவிலே பெரிய பாதாளக்குழியில் விழுதலை தவிர்த்துக்கொள்வோம்.

*கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப் பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயி ருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.* 2 பேதுரு 2:20-22

அதன் பயங்கரத்தை இங்கே பார்ப்போம் - ஜனங்கள் பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார் களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும் என்று வேதாகமம் சொல்கிறது.

தேவனை விட்டு விலகுவதை தடுப்பதற்காக, நாம் அதனை எப்படி மேற்கொள்ளலாம்?

*"எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினை யாகிய நடுச்சுவரைத் தகர்த்து,சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,"* பிலிப்பியர் 2:14-15

வேதாகமம் குறிப்பிட்டுச் சொல்வது போல, செய்கிற எல்லாக் காரியங்களையும் முறுமுறுப்பில்லாமல் செய்வதால், இருண்ட உலகத்திற்கு நீங்கள் வெளிச்சமாய் மாறுவீர்கள்.

*எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்: அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.* 1தெசலோனிக்கேயர் 5:18

தேவன் உங்களுக்கு தேவையான சிறந்ததை அறிவார். அவர் எதையெல்லாம் உங்களுக்கு அனுமதிக்கிறாரோ அதை உங்கள் நன்மைக்காகவே செய்கிறார். ஆகவே நன்றியுள்ளவர்களாய், சந்தோஷமானவர்களாய் எப்பொழுதும் உங்கள் வாழ்க்கையில் அவருடைய நன்மைகளை அறிந்து கொள்கிறவர்களாய் இருங்கள்.

இந்தப் பகுதியில் ஐந்து பிரதான பாவங்கள் பற்றி அறிந்த பகுதியானது மிகப்பெரிய படத்தின் கண்ணிமைக்கும் பொழுது காணும் குறுகிய காட்சி போலாகும். எப்படியாயினும், தேவன் இருதயத்தையே மிகவும் கவனிக்கிறார் என்பதை நீங்கள் இப்பொழுது அறிந்திருப்பீர்கள். ஒவ்வொரு பாவத்தையும் ஆழமாய் சிந்தித்தால், மனந்திரும்புவதற்கு நேரம் போதாமலிருக்கக் கூடும். எப்பொழுதும் தேவனுடைய பார்வையில் நாம் காண மறக்கக்கூடாது. ஒரு கட்டளையை மீறிவிட்டு தேவனுக்குள் இளைப்பாறுவதை விட எல்லா கட்டளைகளையும் மீறுவது நல்லது. ஆகவே, இயேசு கிறிஸ்துவை பற்றிய நம்பிக்கையோடு தேவனுடைய சிங்கானத்திற்கு முன் வரும்போது அவர் செய்து முடித்த காரியத்தின் பகுதியை நாம் காண்போம்.

## விண்ணப்பம்

இப்பொழுது நீங்கள் எங்களுடைய இந்த பாடத்தின் வரிசைப் படுத்தலின்படி போகும்போது, வெங்காயத்தின் அதிக தோல் பகுதிகள் உரிபடுவதைப் போல உங்கள் வாழ்க்கையில் நாம் காண்கிறோம். அல்லாவிடில், இந்த பரிசேயரில் ஒருவரைப்போல நாமும் மாறிவிடுவோம். கவனியுங்கள்!!

இயேசு எங்களுக்காக பாவமானார். கீழே காண்பது போல 2 கொரிந்தியர் 5:21

*‘‘நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்’’*

*எப்படி? கிறிஸ்துவுக்கள் நீங்கள் கேட்கலாம். ஒரு பாவமும் செய்திராத அவர் மீது தேவன் பாவங்களை சுமக்கச்*

*செய்தார். ஆகவே நாம் தேவனுக்குள் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம்.* (ஆளுபு)

இயேசு சிலுவையில் நாம் இருக்கவேண்டிய இடத்தை தான் எடுத்துக்கொண்டார் என்பதை இந்த வார்த்தைகளில் கண்ணாடி போல் தெளிவாய் இருக்கிறது. அதே நேரத்தில், நாங்கள் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் (கிறிஸ்துவின் நீதி எம்மீது வைக்கப்பட்டுள்ளது) இதுவே நீதிவிசாரிப்பு – யாரெல்லாம் தேவனிடத்தில் தாழ்மையாய் வந்து, தேவனை சந்திக்காமல் நான் நீதிமானாய் வரமுடியாது என ஏற்றுக்கொள்கிறானோ அவனுக்கு தேவனுடைய இலவச பரிசாக இது வழங்கப்படுகிறது. நீங்கள் கிருபையினாலே மாத்திரம் நீதிமானாக்கப் பட்டு இருக்கிறீர்கள்!! அதைவிட அதிகமும் இல்லை. குறைவும் இல்லை. இயேசுவாலே அப்படியாயிற்று. கிறிஸ்துவை விட அதிகமானதும் குறைவானதும் பிசாசிடமிருந்து வருகிறது. ஆகவே தான் கலாத்தியர் புத்தகம் கற்றுக்கொடுக்கிறது.

*அது <u>கிருபையினாலே உண்டாயிருந்தால்</u> கிரியைகளினாலே உண்டாயிராது. அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது. அப்படியல்ல வென்றால், கிரியையானது கிரியையல்லவே.* ரோமர் 11:6

*எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி,* ரோமர் 3:23

*பாவத்தின் சம்பளம் மரணம்: தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய <u>இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.</u>* ரோமர் 6:23

*கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்: இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு:* எபேசியர் 2:8-9

*அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், <u>ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும்,</u> நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். 2 தீமோத்தேயு 1:9*

எவ்வளவு அதிகமாய் நீங்கள் இயேசுவுக்குள் காணப்படுகிறீர்களோ அவ்வளவாய் பாவத்தோடு போராட உங்களுக்கு எதிர்ப்புசக்தி உண்டு. வெளிச்சம் உதிக்கும் போது இருள் மறைந்து போகிறது. வெளிச்சத்திற்கு விரோதமாக இருளானது எப்போதுமே வெற்றி பெற முடியாது.

இயேசு கிறிஸ்துவே பதில்!

> *அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்: அவரிடத்தில் பாவமில்லை. 1 யோவான் 3:5*
>
> *பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான். ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.* 1 யோவான் 3:8

ஆகவே, உங்கள் வாழ்க்கையில் அதிகமதிகமாய் இயேசு வெளிப்பட இடமளிப்பதனால், அவருடைய இரத்தம் உங்கள் எல்லா அழுக்குகளையும், கறைகளையும் கழுவி விடுகிறது மாத்திரமல்ல, பாவ உணர்வுகளைவிட ஜீவிக்கிற தேவகுமாரனை (இயேசு) அறிந்திருத்தல் தந்திரகாரனுடைய எல்லா திட்டங்களையும் எதிர்க்க அவருடைய வல்லமை கிடைக்கிறது.

இறுதியாக, ரோம புத்தகத்தில் பவுல் சொல்கிறவிதமாய் பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களாய் எமது வாழ்க்கையை வாழ்வோம்.

> *நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. ரோமர் 6:14*

கடந்த கிழமை நாம் மனந்திரும்புதலை பற்றி பார்த்தோம், அதன் விளைவாக:

i) உங்கள் பாவத்தை அறிந்துகொள்ளல்
ii) மனம் வருந்துதல்
iii) சுய விருப்பங்களை விட்டுவிடல்
iv) குற்றத்தை ஒப்புக்கொள்ளல்

பாவம் என்றால் என்ன என்றும் அது எப்படி உங்களில் இருந்து வெளிப்படுகிறது என்றும் அறிந்தவர்களாய், தேவனுடைய வெளிச்சத்திலே மேலே கூறப்பட்ட வழிமுறையின்படி திரும்ப அவைகளை செய்ய ஆயத்தமாய் இருக்கிறீர்களா?

வாசிப்பதற்காக:

1. மத்தேயு 6:1–6, 7:1–5, 15:1–9.